# Ayurveda in Literary Perspective

**Dr. K. Muthaiyan**
*Assistant Professor, Department of Tamil*
*National College (Autonomous), Tiruchirappalli*

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: அக்டோபர்

வருடம்: 2025

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.17255967

**Abstract**
*This study explores Ayurveda from a literary perspective, emphasizing its roots in Tamil tradition through Siddha medicine. Contrary to the common belief that Ayurveda belongs to the Aryans and Siddha to the Tamils, the research shows that the term Ayuru Veda originates from Tamil, not Sanskrit, with evidence from Agathiyar"s works. Siddha medicine predates Ayurveda by thousands of years, with references in Sangam and classical Tamil texts, suggesting that Ayurveda was later adapted from Siddha practices. While Ayurveda primarily focuses on herbal treatments, Siddha encompasses a broader system including alchemy, metals, minerals, yogic practices, and spiritual goals aimed at achieving immortality and divine union. Historical accounts, literary citations, and philosophical insights affirm that Siddha medicine is more ancient, profound, and holistic than Ayurveda, reflecting the Tamil people"s unique worldview that integrates health, spirituality, and longevity.*
***Keywords:*** *Dhatus (elements) – Metals – Pati (Lord) – God – Cow – Life – Soul – Aryan – Vadavar (Northerners) – Alchemy – Transformation of metals*

**References**

1. Arivoli, Siddhar Songs, Verse No. 42
2. Ibid., Verse No. 56
3. Ibid., Verse No. 69
4. Kakapujandar, Siddhar Songs, Verse No. 4
5. Tiruvalluvar, Thirukkural, Kural No. 912
6. Arivoli, Siddhar Songs, Verse No. 79

# இலக்கிய நோக்கில் ஆயுர்வேதம்

***முனைவர் கூ. முத்தையன்***
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
தேசியக்கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி

***அறிமுகம்***
*ஆயுர்வேதம் என்பது ஆரியர்கள் கையாண்ட மருத்துவ முறை என்றும் சித்த மருத்துவம் என்பது தமிழ்நாட்டைச் சார்ந்த சித்தர்களால் கையாளப்பட்ட முறை என்றும் மக்கள் கருதுகிறார்கள். இந்த இரு முறைகளைப் பற்றி நிலவும் கருத்து எவ்வகையில் ஏற்றுக் கொள்ளப்படுகிறது என்பதை ஆராய்ச்சியின் வாயிலாகவே உணர வேண்டும்.*
***கலைச்சொற்கள்:*** *தாதுக்கள்- உலோகம், பதி- இறைவன், பசு -உயிர், ஆவி -உயிர், ஆரியர் -வடவர், ரசவாதம் -உலோக மாற்றம்*

**சித்த மருத்துவ நூல்கள்**

சித்தர்கள் கையாண்ட மருத்துவத்தை கூறும் நூல்கள் ஏராளமாக உள்ளன. ஆனால் ஒரு மருத்துவ நூலிலும் சித்த மருத்துவ முறை என்ற பெயர் இல்லை. மக்கள் சித்த மருத்துவ முறை என்றும் நூல்களை அச்சிட்டவர்கள் சித்த மருத்துவ நூல்கள் என்றும் குறிப்பிடுகின்ற நிறைய தவிர எந்த ஒரு நூலாசிரியரும் சித்த மருத்துவம் என்ற பெயரை அகச் சான்றாக எந்த நூலிலும் கூறியதில்லை. அகத்தியர் என்ற நூலாசிரியர் மட்டும் சில சித்த மருத்துவ நூல்களில் ஆயுர்வேதம் என்றும் ஆயுர்வேதம் என்றும் சில பாடல்களில் கூறியுள்ளது அகச் சான்றாக காணக்கிடக்கிறது. இதன்மூலம் ஆயுர் வேதம் என்பது தமிழ்ச்சொல் என்பது திண்ணம்.

அகத்தியர் ஆரியர்களாலும் திராவிடர்களாலும் அல்லது வடமொழியாளர்களாலும் தென்மொழியாளர்களாலும் பாராட்டப்படும் ஒரு பேரறிஞர் என்பது உண்மை. அவ்வாறாயின் ஆரியர் போற்றும் அகத்தியரும் திராவிடர் போற்றும் அகத்தியரும் ஒருவரா வேரானவரா என்பது தெரியவில்லை. அகத்தியர் கூறிய ஆயுறு வேதம் அல்லது ஆயுர்வேதம் என்னும் சொற்றொடரின் பொருள் குறித்து ஆராய்கின்ற போது ஆய்+உறு+வேதம் -ஆயுர்வேதம். ஆயுர் வேதம் என்றே ஆதியில் தோன்றிய அகத்தியர் தமது நூல்களில் கையாண்டு உள்ளார் ஆயுர் வேதம் என்பதற்கு பொருள் தாய் கற்பித்த வேதம் என்றும் தாயை அடைவதற்குரிய வேதம் என்றும் இருவகையாக பொருள் கொள்ளலாம். இருவகை பொருளும் பொருந்தும் ஆயினும் தாய் கற்பித்த வேதம் என்பது சிறப்புடையதாகிறது. சித்தர்கள் பாடியுள்ள பாடல்களில் இறைமையும் உரைத்த மொழி எனவும் பெண் ஆத்தாலும் விண்டாலே என்றும் இவை போன்றனவும் தமிழரிடத்தில் மிகுதியாக தாய் வணக்கம் அல்லது சக்தி வழிபாடு மிகுதியாக உள்ளது என்பதையும் ஆயுர்வேதம் என்ற சொற்றொடர் வாயிலாக உணர்த்தப்படுகிறது. இதனை,

**"சாத்திரங்கள் ஓதுகின்ற சட்டநாத பட்டரே**
**வேர்த்து இரைப்பு வந்த போது வேதம் வந்து உதவுமோ**
**மாத்திரைப் போதும் உளேமறிந்து நோக்க வல்லிரேல்**
**சாத்திரப்பை நோய்கள் ஏது**
**சத்தியமூர்த்தி சித்தியே"[1]**

என்று சாத்திர ஞானத்தால் மட்டும் முக்தியை அடைவதற்குரிய பயன்கள் விளையாது என்பதை கம்ப ராமாயணம் விளக்குகிறது.

**ஆயுர்வேதத்தின் பழமை**

ஆயுர்வேதம் என்ற தொடரானது வடமொழி ஆகாது என்பது உறுதி. வடமொழியில் ஆயுர் என்ற சொல் இல்லை. வேதம் என்ற சொல் மட்டுமே உள்ளது. ஆனால் தமிழ் மொழியில் வழங்கிய ஆயுறு என்பது வட வாரியர் ஆயுர் என்று வழங்கினர். ஆரியர்கள் வல்லின றகர உகரத்தை செவ்வனே உச்சரிக்க அறியார். ஆயுறு என்ற தொடரை பாமர மக்களும் பொருள் அறியாத ஆரியரும் ஆயுள் என்று சொல்லவும் பொருள்களவும் முற்பட்டனர்.[2] பிற்காலத்தில் ஆயுர்வேதம் என்பதற்கு ஆயுள் வேதம் என்ற பொருள் வடமொழி அகர வரிசையில் அமைந்தது. தமிழ் மொழியிலிருந்து ஆயுறு என்ற தொடர் வடமொழிக்கு சென்றதால் தமிழ் மருத்துவம் ஆகிய சித்தமருத்துவம் ஆரிய மருத்துவ முறைகளிலிருந்தும் மிகப் பழமையானது என்பதையும் கடன் தரும் வளமும் உடையதாக இருக்க வேண்டும் எனவும் அறிய முடிகிறது. வட ஆரியர் மருத்துவம் தமிழ் மருத்துவம் ஆகிய சித்த மருத்துவத்திலிருந்து தோன்றியது என்பதற்கு ஆரியர் மருத்துவத்தை விட சித்த மருத்துவம் வளமும் வலிமையும் மிகுந்தது என்பதற்கு பல ஆதாரங்கள் உள்ளன. சித்தர்கள் கையாண்ட மருத்துவமாகிய சித்தமருத்துவம் ஆரிய மருத்துவத்திற்கு தாய் என்பதற்கும் வழிகாட்டிய மருத்துவம் என்பதற்கும் உரிய ஆதாரங்கள் உள்ளன.

> **"ஒன்பதான வாசல் தான் ஒழியுநாள் இருக்கையில்**
> **ஒன்பதான ராம ராம ன்னு நாமமே**
> **வன்மமான பெயர்கள் வாக்கில் வந்து நோய் அடைப்பரம்**
> **அன்பரான பெயர்கள் வாக்கில் ஐந்து அமைந்த இருப்பதே"[3]**

என்று ஒன்பது வாயில்கள் கொண்ட இந்த உடலானது ஒழியும்போது ராம ராம மந்திரத்தையே ஒன்பது முறை கூறினால் தவம் செய்த மற்ற மனிதர்களை விட பிறவி துன்பத்தை எளிமையாக கலையும் என்று சொல்லப்படுகிறது. இதன் வாயிலாக தமிழகத்தில் ஒன்பது துளைகளை உடைய மனித உடம்பின் பிரமிப்புகளை சித்தர்கள் காலத்திலேயே அடையாளம் கண்டு அதன் இயக்க முறைகளை அறுதி இட்டு வைத் திருந்தார்கள் என்பதை உணரலாம்.

**சித்த மருத்துவத்தின் பழமை**

> **"பாரப்பா இதை யார் யார் சித்தர் கூடி**
> **பார்தனில் 64 யோகம்**
> **ஆரப்பா இருக்கும் என்று வெவ்வேறாக**
> **அலைந்த அலைந்து கெட்டவர்கள் ஆனந்தம் கோடி**
> **நேரப்பா ராசாங்க யோகம் பார்த்து**
> **நிலையறிந்து கண்டவனே கோடிக்கு ஒன்று**
> **வீரப்பா பேசாமல் மணக்கண்ணாலே**
> **விந்துவடா பாய்ந்ததளம் வெளியே காணே"[4]**

என்று காகபுஜண்டர் குறிப்பிடுவதன் மூலம் பலவித சித்தர்களும் 64 வகை யோகம் என்று ஒவ்வொன்றாக பயின்று அண்ட உச்சியில் யோக முயற்சியால் யோகங்களில் ராஜ யோகம் சிறந்தது என்பதை ஆராய்ந்து கண்டுபிடித்து வைத்திருந்தார்கள் என்ற கருத்தின் வாயிலாக சித்தர்கள் தொன்மையான சிந்தனையாளர்கள் என்பதை நாம் நன்றாக உணரலாம்.

ஆரியர்கள் கையாளும் ஆயுறு வேதம் வேத காலத்திற்குப் பின்பு எழுதப்பட்டதாக இருக்க வேண்டும் நான்கு பெரு வேதங்கள் தோன்றிய காலம் கிமு 2000 முதல் கிமு 1500 வரை உள்ள காலமாகஇருக்கலாம். அதற்குப்பின்பே ஆரியர்கள் ஆயுர்வேதத்தை இயற்றி இருக்க வேண்டும். அதர்வன

வேதத்தின் பகுதி ஆகிய ஆயுர்வேதம் கிபி 9 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்டிருக்கலாம். சித்த மருத்துவமோ கிமு 14,000 ஆண்டு களுக்கு முன்பு இயற்றப்பட்டுள்ளது.

**"மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது**
**அற்றது போற்றி உணின்"[5]**

**(குறள் எண் 912)**

என்ற வள்ளுவ பேராசனும் தமிழ் மருத்து வத்தின் தொன்மையை இணைந்து பறைசாற்றுகிறார்.

### வரலாற்று ஆசிரியர்கள் கருத்து

தமிழ் இலக்கிய வரலாறு எழுதப் புகுந்த வரலாற்று ஆசிரியர்கள் காலத்தை இடைக்காலம் எனக் கூறுவதற்கு சிறிதும் ஆதாரங்கள் இல்லை. ஏனெனில் திருமூலர் என்னும் சித்தர் 3000 ஆண்டுகள் இருந்து ஆண்டிற்கு ஒரு பாடல் வீதம் 3000 பாடல்களை பாடினார் என்று கூறுவர். திருமூலருக்கு முன்பு அகத்தியர் வாழ்ந்தார். அகத்தியர் பற்றிய ஆராய்ச்சியும் காலமும் இன்னும் முற்றுப்பெறவில்லை. ஆகவே சித்தர்கள் காலம் இடைக்காலம் அன்று. சித்தர்கள் காலத்தை இத்தனை என்று வரையறுத்துச் சொல்லவும் ஆதாரங்கள் இல்லை. ஆதாரம் இல்லாததால் தொன்மையானது என்று இயம்பவில்லை. சித்த மருத்துவத்திலிருந்து ஆயுர்வேதம் உருவானது என்று கூறுவதற்கு பல ஆதாரங்கள் உள்ளன.

### ஆயுர் வேதத்தின் தோற்றம்

**"பஞ்சபூத பலகை கப்பலாய் சேர்த்து**
**பாங்கான ஓங்குமரம் பாய்மரம் கட்டி**
**நெஞ்சு மனம் புத்தி ஆங்காரம் சித்தம்**
**மானாபிமானம் கயிறாகச் சேர்த்து**
**ஐந்தெழுத்தைக் கட்டி சரக்காக ஏற்றி**
**ஐம்புலன் தண்ணிலே சுக்கான் இருத்தி**
**நெஞ்சு கடாட்சத்தால் சீனிப்பாய் தூக்கி**
**சிவனுடைய திருப்பொருளை சிந்தையில் நினைத்து**
**தஞ்சலான வெள்ளத்தில் தானே**
**அகண்ட ரதம் போகுதடா"[6]**

என்று காயகல்ப சித்தி முறையை சித்தர்கள் குறிப்பிடுவதன் வாயிலாக தமிழர்களின் தொன்மையான ஆயுள் அதிகரிக்கும் முறையை அறியலாம்.

ஆயுர் வேதத்தை கூறும் சாரங்க தரசாம் ஹிதை என்ற நூலானது கிபி 1300 ஆம் ஆண்டிலும் அஷ்டாங்க இருதயம் என்ற நூலானது கிபி 900ஆம் ஆண்டிலும் பரப்பிரகாசம் என்பது கிபி 1600 லும் இயற்றப்பட்டது தெரிகிறது. கிபி 1300-ல் தோன்றிய சாரங்கதாசன் வடமொழியில் நாடி பார்க்கும் முறையை தமிழில் இருந்து மொழி பெயர்த்தார். பல சித்த மருத்துவ நூல்களையும் வடமொழியில் எழுதினார். ஆயுர்வேத நூல்களில் சரதர், சுருதர், வாக்பட்டர், மாதவகிரர் ஆகியோர் நாடியில் நோய் அறியும் வகையை சொல்லவில்லை. வடமொழி ஆரியரின் ஆயுர்வேத கொள்கை சித்த மருத்துவத்தை முழுவதும் பின்பற்றுவது அன்று. உடல் நலம் பெற வழிவகை செய்வதே ஆரியர்களின் ஆயுர்வேதத்தின் குறிக்கோள். திராவிடர்களாகிய சித்தர்களின் குறிக்கோளோ, உயிர் வாழ்கின்ற போதே உடலில் உள்ள ஐந்து பூதங்களையும் ஒவ்வொன்றாக நீக்கி இறுதியில் உயிர் இறையை அடையச் செய்தல் ஆகும்.

### சித்திப் பெருவாழ்வு அடைதல்

ஆரியர்கள் தாங்கள் இயற்றிய மீமாம்சை, நியாமம், நவ சேடிகார், கிரங்கியம், யோகம், வேதாந்தம் என்னும் ஆறு காட்சிகளுக்கும் உடல் கால வசத்தால் பிணமாக விழவும் உயிர் முக்கிய இடமும் என்ற கொள்கை முடிவு உடையவர்கள். இக்கொள்கை தமிழருக்குப் பொருந்தாது. தமிழரின் குறிக்கோள் ஏனென்றால் அன்பாலும், யோகமாகிய வழி நிலையாலும் மணி மந்திர மருந்துகளின் துணையாலும் குருவருளாலும் அமிர்த சித்தியாகிய இறவாத நிலை என்னும் உருவ சித்தியும் அருவ சித்தியும்

உருவருவ சித்தியும் முறையாகப் பெற்று அருள் ஒளி என்னும் இயற்கை விளக்கம் பெற்று உள்ளம் புறமும் ஊடுருவிச் செல்லும் பூரண விளக்கத்தால் தன் இழப்பு என்னும் முன்னிலை சுட்டெழுத்து மெய்ஞானத்தால் உடல் சித்தி பெறுவது என்கிற பேரின்ப பெருவாழ்வு நிலையை அடைய முற்பட்டவர்கள் என்பதை சித்தர்களின் கூற்றுகளால் அறிகிறோம். ஆயுர்வேத சூத்திரங்களுக்கு விரிவுரை எழுதிய யோகானந்தர் என்பவர் சித்த மருத்துவ நூல்கள் எழுதிய சித்தர்களுள் ஒருவராக அறியப்படுகிறார் அவர்தம் கூற்று மேற்கண்ட செய்திகளை உறுதிப்படுத்துகிறது.

ஆயுர்வேத மருத்துவம் சித்த மருத்துவத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டு இருக்க வேண்டும். சித்த மருத்துவம் விரிவானது. ஆயுர்வேத மருத்துவம் சுருக்கமானது. சித்த மருத்துவ முறைகள் அனைத்தும் வடமொழியில் மொழிபெயர்க்கப்பட்டதால் ஆயுர்வேதம் சித்த மருத்துவத்தை விட குறைந்த இயல்புடையதாய் இருக்கிறது. ஆயுர்வேத மருத்துவத்தில் பெரும்பாலும் மூலிகை முறையே மிகுதியாக காணப்படுகிறது. சிறுபான்மை ரசவர்க்க முறையும் உலோக முறையில் உள்ளது.

**தாந்தரிக முறை**

சித்த மருத்துவத்திலோ மூலிகை முறையோடு இரசவர்க்க முறை உலோக முறை மிகுதியாக உள்ளது. மேலும் சித்த மருத்துவத்தில் உலோக வகைகள் ரச வகைகள் பயன்படுத்தும் தாந்திரீக முறையானது வடமொழியில் உள்ள ஆயுர்வேத நூல்களில் காணும் தாந்திரிக முறைக்கு வேறுபட்டதாகவே காணப்படுகிறது. சித்தர்கள் மூலிகை முறையை விட உலோக முறைகளையும் ரசவகை முறைகளையும் உயர்வாகவும் சிறப்பாகவும் கருதினர். சித்த மருத்துவ நூல்களில் பரிபாஷைச்சொற்கள் மிகுதியாக இருப்பதால் நுண்மான் நுழைபுலம் உடையவரே சித்த மருத்துவத்தை அறிய முடியும் என்பது கருதத்தக்கது.

**தங்கத்தையும் உற்பத்தி செய்யும் வித்தை**

13 ஆம் நூற்றாண்டில் இந்தியாவிற்கு வந்த மார்க்கோபோலோ என்னும் வெளிநாட்டு கடற்பயணி தமிழகத்தை பார்த்து தமிழ்நாட்டில் உள்ள ரசவாதிகள் தங்கத்தை உற்பத்தி செய்ய முயற்சி செய்யவில்லை. ஆனால் நீண்ட காலம் வாழும் வலியை தேடினர். யோகிகள் நூற்றி ஐம்பது முதல் 250 ஆண்டுகள் வரை சாதாரணமாக உயிர் வாழ்கின்றனர். இவர்கள் உள்ளிழுத்து விழுங்கும் பாதரசமும் கந்தகமும் சேர்ந்த கலவை சரியான விகிதத்தில் ரகசியமாக இருந்தது என்று கூறுவதன் வாயிலாக தமிழர்கள் மருத்துவ முறையால் மேம்பட்டு நீண்ட காலம் வாழ்வதற்குரிய வழி வகை களை பெற்றிருந்தனர் என்பதை அறிய முடிகிறது.

**முடிவுரை**

ஆயுறு வேதம் என்பது தமிழ்ச்சொல் என்பதும் வடசொல் அன்று என்பதும் அகத்தியர் சித்தரே என்பதும் சித்த மருத்துவத்திலிருந்து ஆயுர்வேதம் தோன்றியது என்பதும் ஆய்வாளர்களின் முடிவாக உள்ளது. சித்த மருத்துவமே ஆயுர்வேதத்திலும் தொன்மையது என்பதும், வன்மையும், வண்மை வளமும் வாய்ந்தது என்பதும் தமிழர்தம் இறையை அடையும் முறைகள் வேறுபட்டவை என்பதும் உலக அளவில் தமிழர்களின் பண்பட்ட வாழ்வியலை பறைசாற்றுகின்றன. சித்தர்கள் ரச வாதிகளாகவும் நீண்ட காலம் வாழக் கூடியவர்கள் என்பதையும் புலப்படுத்துகின்றன. நமது மண்ணில் வாழ்ந்த சித்தர்களையும் யோக விற்பனர்களையும் பின்பற்றி வாழ்வதன் மூலம் இந்நில உலகில் நீண்ட காலம் வாழலாம் என்பதையும் இவ்வாய்வு எடுத்துரைக்கிறது.

**சான்றெண் விளக்கம்**

1. அறிவொளி அ., சித்தர் பாடல்கள், ப.எண் 42.
2. மேலது, ப.எ-56
3. மேலது, ப.எ-69
4. காகபுஜண்டர், சித்தர் பாடல்கள் பா.எ-4.
5. திருவள்ளுவர், திருக்குறள், கு.எ-912.
6. அறிவொளி, சித்தர் பாடல்கள், ப.எ-79.